

விக்கிரவாண்டி சூர்யா பொறியியல் கல்லூரியில் தேசிய அளவிலான கருத்தரங்கில் மாணவர்களுக்கு சான்றிதழை விசாலாட்சி பொன்முடி வழங்கினார் .

# பொறியியல் கல்லூரியில் தேசிய கருத்தரங்கு

விக்கிரவாண்டி, மார்ச் 26-

விக்கிரவாண்டி சூர்யா பொறியியல் கல்லூரியில் கணிணி அறிவியல் மற்றும் மின்னனுவியல் துறைகள் சார்பில் தேசிய கலந்தாய்வு கருத்தரங்கு நடந்தது.

சேர்மன் கவுதம சிகாமணி தலைமை தாங்கினார். செயலாளர் அசோக் சிகாமணி முன்னிலை வகித்தார். கல்லூரி டீன் ஜெயசங்கர் வரவேற்றார் .

கருத்தரங்கை துவக்கி வைத்து புதுச்சேரி பொறியியல் கல்லூரி பேராசிரியர் நாகராஜன் பேசுகையில், இன்றைய நவீன விஞ்ஞான உலகில் தகவல் தொழில் நுட்ப துறையில் புதிய யுக்திகள் அதிகம் வருகிறது. அதற்கேற்றார் போல் மாணவர்கள் தங்களை தயார் படுத்தி கொண்டால் தான் போட்டிகளை வென்றிட முடியும்.

படிக்கும் காலத்தில் ஆசிரியர்கள் கல்லூரியில் கற்றுத்தருவதையும், வெளி அனுபவங்களில் கிடைக்கும் பயிற்சியே எதிர்கால வெற்றிக்கும், மாணவர்களின் திறமைக்கும் வித்தாக அமையும் என்றார்.

கருத்தரங்கில் 156 கலந்தாய்வு கட்டுரைகள் சமர்பித்து 56 கட்டுரைகள் தேர்வு செய்யப்பட்டது . மாணவர்களுக்கு விசாலாட்சி பொன்முடி சான்றுகளை வழங்கி பாராட்டினார் .

நடுவர்கள் பேராசிரியர்கள் சந்தான கிருஷ்ணன், சுந்தர் ராஜன், தனபதி, ஒருங்கிணைப்பாளர்கள் ஜெகன், சுபா, புஷ்கலா, பரத், கார்த்திக் உட்பட பலர் கலந்து கொண்டனர் .